## கோலாலம்பூர் பெரிய மார்க்கெட்டில்

# அந்நிய நாட்டவர்களின் பொருட்கள் பறிமுதல்



கோலாலம்பூர், ஜூலை 3- கோலாலம்பூர் பெரிய மார்க்கெட் பகுதியில் சட்ட விரோதமான முறையில் வியாபாரம் செய்துவந்த அந்நிய நாட்டைச் சேர்ந்த 9 பேரின் கடைகளில் உள்ள பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கப் பிரிவினர் பறிமுதல் செய்தனர்.

2016ஆம் ஆண்டு கோலாலம்பூர் மாநகர் மன்றத் தின் அங்காடி வியாபாரிகள் லைசென்ஸ் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அது நேற்றுக் கூறியது.

அதேவேளையில் 1924ஆம் ஆண்டு சாலை, கால்வாய், கட்டடச் சட்டத்தின் 46 (1) (டி) பிரிவின் கீழ் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. 2016ஆம் ஆண்டு வியாபாரம், தொழில்துறைச் சட்டத்தின் லைசென்ஸ் பிரிவின் கீழ் அவர்களுக்கு 2 சம்மன்கள் சார்வு செய்யப்பட்டதாகவும் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது.

பறிமுதல் செய்யப் பட்ட அனைத்துப் பொருட்களும் செராஸ் தாமான் மிஹர்ஜாவில் உள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.



தலைநகரில் அந்நிய நாட்டவர் கள் சட்டவிரோதமான முறையில் மேற்கொண்டு வரும் வியாபார நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு இதுபோன்ற அதிரடிச் சோதனைகள் அவ்வப்போது நடத்தப்படும் எனவும் அந்த அறிக்கை கூறியது.